# இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த கருத்து நிலை: இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழக முஸ்லிம் மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு

**Mazahir S.M.M.[107], Helfan M.L.M.[108], Rakshana Farvin M.U.[109] & Shihana M.S.F.[110]**

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் என்பது இலங்கை முஸ்லிம்களுக்குரிய தனித்துவமான சட்டமாகும். இச்சட்டத்தின் ஊடாக திருமணம், விவாகரத்து, வக்பு தொடர்பாக எழும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமாக உள்ளது. இச்சட்டம் குறித்த இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் கருத்து நிலை எவ்வாறு உள்ளது என்பதைக் கண்டறிதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். பண்பு ரீதியான ஆய்வு முறையிலமைந்த இவ்வாய்வு, தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவ, மாணவிகளின் எழுமாறாக 100 பேரிடம் இது தொடர்பான வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. கிடைக்கப்பட்ட தகவல்களின்படி பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் பெரும்பாலான மாணவர்கள் இது தொடர்பான அறிவைப் பெறவில்லை. ஆனால், முஸ்லிம் தனியார் சட்டம் ஒன்று இருப்பதை மட்டும் அறிந்துள்ளார்கள். இருந்த போதிலும் உலமாக்களின் பிள்ளைகள் மற்றும் மத்ரஸாவில் கல்வி கற்று இப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மௌலவி மாணவர்கள், மாணவிகள் இது தொடர்பான அறிவைப் பெற்றிருக்கின்றனர். எனவே, இத்தனியார் சட்டம் தொடர்பான அறிவை இப் பல்கலைக்கழக மௌலவி அல்லாத மாணவர்கள் மற்றும் மாணவிகள் தெரிந்து கொள்வதற்கான வழிகாட்டல்கள், முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர் காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**பிரதான சொற்கள்:** இலங்கை, முஸ்லிம் தனியார் சட்டம், பல்கலைக்கழக மாணவர்கள்

## ஆய்வுப் பின்னணி

பல்லின மக்கள் வாழும் இலங்கை நாடானது பல்வேறு சட்ட முறைமையை கொண்டுள்ளது. அந்தவகையில் இலங்கையின் பொதுச் சட்டமானது இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் பொதுவானதாகும். பொதுச் சட்டம் றோமன் டச்சுச் சட்டக் கொள்கையினதும், ஆங்கிலச் சட்டக் கொள்கையினதும் அம்சங்களைக் கொண்டுள்ளது. பொதுச் சட்டத்திற்கு சமாந்தரமாக வேறு மூன்று சட்டங்களும் இலங்கையில் காணப்படுகின்றன. அவை கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் தனியார் சட்டம் ஆகியனவாகும். கண்டியச் சிங்களவர்கள் கண்டியச்சட்டம் மூலமும், யாழ்ப்பானத் தமிழர்கள் தேசவழமைச் சட்டம் மூலமும் இஸ்லாமிய நம்பிக்கையைப் பின்பற்றுபவர்கள் முஸ்லிம் தனியார் சட்டம் மூலமும் ஆளப்படுகின்றனர். குடியியல், குற்றவியல் விடயங்களில் எல்லோரும் எவ்வித வேறுபாடுகளுமின்றி பொதுச் சட்டத்தினாலேயே ஆளப்படுவர்.

அந்தவகையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் சவுதி அரேபியா, இந்தோனேஷியா, சிரியா, மலேசியா போன்ற நாடுகளில் பொதுவாக இஸ்லாமிய சட்டங்களின் அடிப்படையிலேயே குடியியல் மற்றும் குற்றவியல் அம்சங்கள் அமுலாக்கப்படுகின்றன. ஆனால் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் இந்தியா, இலங்கை போன்ற ஒரு சில நாடுகளிலேயே இஸ்லாமிய சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மேலும் இலங்கை முஸ்லிம் தனியாள் சட்டம் ஓர் ஆள்சார் சட்டமாகும். இச்சட்டமானது இலங்கை முஸ்லிம்களின் திருமணம், மண நீக்கச்சட்டம், முஸ்லிம் வாரிசுரிமைக் கட்டளைச்சட்டம், மற்றும் பள்ளிவாசல்கள், வக்ப் - தர்ம நம்பிக்கை பொருப்புச் சட்டம் போன்ற விடயங்களில் மாத்திரமே சட்ட ஏற்பாடுகளைக் கொண்டு காணப்படுகின்றன. அதிலும் திருமணம், மண நீக்கச்சட்டம் மாத்திரமே பொதுச்சட்டத்தின் தலையீடின்றி முழுமையாக நடைமுறையிலுள்ளது.

To whom correspondence should be addressed: mazahirsmm@seu.ac.lk

[107] Senior Lecturer, Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

[108] Assistant Lecturer, Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

[109] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

[110] Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka.

7.2% ஆக (http://www.libepopulation.com, population of srilanka 2017) முஸ்லிம்கள் வாழும் எமது நாட்டில் அவர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கென 65 காழி நீதிமன்றங்களும் முஸ்லிம்களுக்கென தனியான சட்டமும் காணப்பட்ட போதிலும் சமகாலத்தில் முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் பல்வேறு சர்ச்சைகள் எழுந்த வண்ணம் உள்ளன. அவற்றைப் பின்வருமாறு தெளிவுபடுத்த முடியும்.

- முஸ்லிம் தனியார் சட்டம் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் ஒளியில் மீளாய்வுக்குட்படுத்தப்படல் வேண்டும்.
- முஸ்லிம் திருமணத்தின் போது மணப்பெண்ணின் சம்மதமானது வலிதாரரூடாக தெரிவிக்கப்படல் வேண்டும். இது நடைமுறையில் மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. ஏனெனில் வலிதாரர் சம்மதமளிக்கையில் உண்மையிலேயே மணப்பெண்ணின் சம்மதம் பெறப்பட்டதா என்பதனை நிரூபிக்க முஸ்லிம் சட்டத்தில் எதுவித ஏற்பாடுகளும் இல்லை. எனவே திருமணத்தின் போது மணப்பெண்ணின் சம்மதத்தை, மணப்பெண் தானே பகிரங்கமாக தெரிவிக்கக் கூடிய வகையில் முஸ்லிம் தனியார் சட்டம் திருத்தப்படல் வேண்டும்.
- அடுத்த பிரச்சினை என்னவெனில் பெண்ணின் சம்மதத்தை தெரிவித்து திருமணத்தை நடத்தும் வலிதாரர்களாக ஆண்கள் மட்டுமே இருக்க முடியும் என்பதாகும். இது ஷாபி பிரிவின் கீழ்வரும் பெண்களுக்கான சட்டமாக இருக்கின்றது. அதேசமயம் ஹனபி பிரிவின் கீழ் ஆணோ பெண்ணோ வலிதாரராக இருக்க சட்டம் இடமளிக்கின்றது. இம் முரண்பாட்டால் ஷாபி பிரிவின் கீழ்வரும் பெண்கள் மாத்திரம் முஸ்லிம் சட்டத்தின் மூலம் பாரபட்சப்படுத்துவதாக உள்ளது.
- பொதுவாக இலங்கையில் திருமணத்துக்கான ஆகக் குறைந்த வயதெல்லையாக ஆண் பெண் இருபாலாருக்குமே பதினெட்டு வயதென பொதுச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது. ஆனாலும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ் ஆகக் குறைந்த வயதெல்லை என்ற எதுவித ஏற்பாடுமில்லை, பருவ வயதை அடைதல் என்பதே வயதெல்லையாகக் குறிப்பிடப்படுகின்றது.
- மேலும் சுட்டிக்காட்டத்தக்க மற்றுமொரு விடயம் இலங்கையின் பொதுச்சட்டத்தின் கீழ் திருமணப்பதிவாளர்களாக ஆண் பெண் இருவரும் கடமையாற்றக் கூடியதாக உள்ள போதும் முஸ்லிம் சட்டத்தின் கீழ் ஆண்கள் மட்டுமே திருமணப்பதிவாளர்களாக செயற்பட முடியும் என்பதாகும்.
- விவாகம், விவாகரத்து விடயங்களில் பெண்களுக்கு பாரிய அநீதிகள் இடம் பெறுவதாக குற்றச்சாட்டுக்களும் பெண்களின் திருமண வயதெல்லை அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறு பல பிரச்சினைகள் எழுந்துள்ள நிலையில் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த அறிவும் தெளிவும் எத்தனை முஸ்லிம்களுக்கு காணப்படுகின்றது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

**ஆய்வுப் பிரச்சினை**

அண்மைக்காலமாக இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தில் பிரதானமாக முஸ்லிம் விவாகம், விவாகரத்து தொடர்பான பல்வேறு சர்ச்சைகள் எழுந்த நிலையிலுள்ளது. ஆனாலும் இது பற்றிய அறிவும் தெளிவும் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் குறைவாகவே காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

இலங்கை முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பான அறிவும் தெளிவும் முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் எந்நிலையில் காணப்படுகின்றது என்பதனை அறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

பண்புரீதியான ஆய்வு முறையியலான இக்கற்கை முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். இலங்கை தென்கிழக்குப் பல்கலைகழக முஸ்லிம் மாணவர்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட 100 வினாகொத்து பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டது. அந்தவகையில் இது

சம்பந்தப்பட்ட ஆவணங்களும் மீளாய்வு செய்யப்பட்டன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும், பிரதான கண்டறிதல்களும்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் மொத்த தொகையினை வீதத்தின் அடிப்படையில் அட்டவணை காண்பிக்கின்றது.

| RACE | |
|---|---|
| Muslims | 61 % |
| Tamils | 9 % |
| Sinhalese | 29% |
| Christians | 1% |

மூலம்: students grant total (2015/2016)

2015/2016 கல்வியாண்டுக்குரிய இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினுடைய மொத்த மாணவர் தொகை 4733 ஆகும். இத் தென் கிழக்கு பல்கலைக்கழகத்தினுடைய மொத்த மாணவர் தொகையில் முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை 2876 ஆக காணப்படுகின்றது. அந்தவகையில் 61% ஆன முஸ்லிம் மாணவர்கள் பயிலும் இப்பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த ஆய்வொன்றை மேற்கொண்ட போது இது குறித்த அறிவும் தெளிவும் அவர்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர்களின் மத்தியில் வழங்கப்பட்ட வினாக்கொத்து மூலமாக இம்மாணவர்கள் மத்தியில் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த கருத்து நிலையை இலகுவாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அந்தவகையில் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்து பரந்துபட்ட அறிவு மாணவர்கள் மத்தியல் காணப்படாத போதிலும் 82% ஆனோர் தாம் முஸ்லிம் தனியார் சட்டத்தின் மூலமாகத்தான் ஆழப்படுகின்றோம் என்று அறிந்துள்ளனர். வழங்கப்பட்ட வினாக்கொத்தின் அடிப்படையில் 98% ஆன மாணவர்கள் இலங்கை வாழ் முஸ்லிம்கள் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த அறிவை பெற்றுக் கொள்வது தேவை என கருதுகின்றனர். பல்லின மக்கள் வாழும் சமூகத்தில் இச்சட்டம் தொடர்பான அறிவும் தெளிவும் சரியான வழிமுறைகளை பயன்படுத்தி வழங்கப்படுதல் அவசியம் ஆகும். அந்தவகையில் இம் முஸ்லிம் தனியார் சட்டமானது இன்று இலங்கையில் பல்வேறு மாற்றங்களை வேண்டி நிற்பதுடன் அதனுடன் தொடர்பான பல்வேறு கருத்து முரண்பாடுகளும் காணப்படுகின்றது. இது தொடர்பாக பின்வருமாறு கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

“முஸ்லிம் தனியார் சட்டம் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் ஒளியில் மீளாய்விற்கு உற்படுத்தப்படல் வேண்டும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா தலைமையிலான முஸ்லிம் சட்ட நிபுணர்கள் மற்றும் புத்தி ஜீவிகளின் ஆலோசனைகளை பெறாது முஸ்லிம் தனியார் விவாக விவாகரத்து சட்டங்கள் குறித்த எத்தகைய முடிவுகளையும் முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகள் எந்த ஒரு அவையிலுமோ குழுவிழுமோ எடுக்கக் கூடாது.”


மேலும் அந்தந்தச் சமூகங்கள் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமையை அரசியல் அமைப்பு (16-1) என்ற உறுப்புரை உறுதிப்படுத்தி உள்ளது. அதனை நீக்கி விடுமாறு எழுப்பப்படுகின்ற கோரிக்கைகளை முஸ்லிம் சமூகம் ஒரு பொழுதும் அங்கீகரிக்கப்போவதில்லை மேற்படி தனியார் சட்டங்களில் சீர்த்திருத்தங்கள் கொண்டு வரப்படின் அது குறிப்பிட்ட சமூகங்களினால் மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். ஆதனை அரசாங்கமோ அல்லது வேறேதேனும் மூன்றாவது சக்திகளோ திணிக்க முடியாது. அண்மைக்காலங்களில் இச்சட்டம் மீள் சீர்த்திருத்தப்பட வேண்டிய அவசியம் குறித்த பிரச்சினை தொடர்பாக 58.33% ஆனவர்களே அறிந்துள்ளனர்.

அந்தவகையில் நோக்கும் போது இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழக்கூடிய பிரதேசங்களில் கூட முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த தெளிவு காணப்படாததை அவதானிக்க முடிகின்றது. அது மாத்திரமன்றி ஆலிம்கள் சட்டத்தரணிகளைக் கொண்ட குடும்பங்களிலிருந்து வந்திருக்கக் கூடிய மாணவர்களும் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்து முழுமையான அறிவு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இன்னும் சில மணவர்கள் தனியார் சட்டம் குறித்த சிறியளவிலான தெளிவை பெற்றிருந்த போதும் அது பூரணமானதொன்றாக காணப்படவில்லை, காரணம் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த சொற்ப அறிவினை பாடசாலைக் கல்வி மற்றும் அஹதிய்யா வகுப்புக்களில் பெற்றுக் கொண்டவர்களாகவே பெரும்பான்மையான மாணவர்கள் காணப்படுகின்றனர்.

அதேசமயம் பல்கலைக்கழக வளாகத்திலும் கூட தனியார் சட்டம் குறித்த அறிவை பெரும்பான்மையான மாணவர்கள் பெற்றுக்கெள்ளாததும் தனியார் சட்டம் பற்றிய அறிவை பாடசாலைக் கல்வியிலேயே தெளிவாக அடைந்து கொள்ளும் அவா இம்மாணவர்களிடம் காணப்படுகின்றமையும் கண்டறியப்பட்டது.
*முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த அறிவை மாணவர்கள் பெற்றுக்கொண்ட வழிமுறைகள்.*

| வழிமுறைகள் | வீதம் |
|---|---|
| சமூக வலைத்தளங்கள் | 32% |
| பாடசாலைகள் | 72% |
| பத்திரிகைகள், சஞ்சிகைகள் | 40% |
| மார்க்க அறிஞர்கள் | 30% |

இதனை பின்வரும் வரைபடம் மூலம் அறியலாம்.




முஸ்லிம் தனியார்சட்டம் குறித்த அறிவை பெறும்பாலான மாணவர்கள் பாடசாலைக்கல்வி மூலமே பெற்றுக்கொண்டுள்ளனர். இருந்த போதிலும் இச்சட்டம் குறித்த ஆழமான அறிவை இவர்கள் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது.

இன்றைய காலகட்டத்தை பொருத்தவரையில் அதிகமான முஸ்லிம் மாணவர்கள் சமூகவலைத்தளங்களையே அண்டி வாழ்கின்ற போதும் இக்குறித்த அறிவைப்பெருவதில் மிகவும் குறைந்த ஈடுபாடு கெண்டுள்ளதை காணலாம். அந்தவகையில் இலங்கையில் 13 இலட்சத்திற்கு அதிகமானோர் முகநூல் பாவனையாளர்களாக காணப்படுகின்றனர். இவ்வாறான சமூக வலைத்தளங்களில் முஸ்லிம்

இளைஞர்கள் யுவதிகள் தங்கியுள்ள போதிலும் இதனூடாக தமது சட்டம் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதில் அவர்களிடம் பின்தங்கிய நிலையே காணப்படுகின்றது.

இன்று 40% ஆனவர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் மூலமாக இச்சட்டம் குறித்த சொற்ப அறிவை பெற்றிருந்த போதிலும் இது குறித்த தெளிவான அறிவு நிலை அவர்களிடம் காணப்படாமலேயே இருக்கின்றது.

இன்றைய மார்க்க அறிஞர்கள் கூட ஆற்றுகின்ற சொற்பொழிவுகளின் தலைப்புக்களாக தனியார் சட்டம் என்ற ஒன்றை எடுத்துக்கொள்வதில்லை, காரணம் அவர்கள் கூட இதன் முக்கியத்துவத்தினை உணராமையாகும்.

**பரிந்துரைகள்.**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை பொருத்தமட்டில் இவ்வாறான தனியார் சட்டம் குறித்த அறிவின் தெளிவை கருத்தரங்குகள் மூலம் மாணவர்களுக்கு வழங்குவது இலகுவாக காணப்படும். ஆங்காங்கே முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கே உரிய தனியார் சட்டம் பற்றிய அறிவின் தெளிவின்மையை துண்டுப் பிரசுரங்கள் மூலம் உணர்த்துவதனூடாக தனியார் சட்டம் குறித்த அறிவு மக்கள் மத்தியில் எந்த நிலையில் காணப்படுகின்றது, அது முஸ்லிம் மக்கள் மத்தியில் எந்தளவு முக்கியத்துவம் என்பதை உணர்த்த வேண்டும்.

எமது பல்கலைக்கழகம் முஸ்லிம்களை மையமாகக் கொண்டு காணப்படுவதால் இஸ்லாமிய கற்கைநெறிகள் மற்றும் அறபுமொழி பீடத்தில் தனியார் சட்டம் குறித்த அறிவை ஆரம்ப அறிவாக ஒரு பருவகாலத்திற்கு பாடமாக வழங்கப்படுவதனூடாக மாணவர்களின் இஸ்லாமிய இல்லற வாழ்வியல் மற்றும் வெளிக்கள இஸ்லாமிய வாழ்வியலுக்கு உபயோகமாய் அமையும்.

தனியார் சட்டம் குறித்த தெளிவு பெற்ற ஒரு மாணவர் குழுவை திரட்டி அவர்கள் மூலம் தனியார் சட்டம் குறித்த சஞ்சிகைகள், கட்டுரைகள், சுவரொட்டிகள் என்பவற்றை வெளியிட்டு மக்களின் பார்வைக்கு பதாதைகளாகவும், சுவரொட்டிகளாகவும், குறிப்புப் பலகைகளில் அறிக்கை இடுவதனூடாகவும் தனியார் சட்டம் குறித்த அறிவை மாணவர்களுக்கும், மக்களுக்கும் இலகுவாக வழங்க முடியும்.

பொதுவான போட்டி நிகழ்ச்சிகள் விவாத அரங்குகள் என்பவற்றிற்கு தலைப்பாக வழங்கப்பட்டு மாணவர்களையும் மக்களையும் ஆர்வப்படுத்துவதன் ஊடாக இந்த தனியார் சட்டம் குறித்த அறிவை மேம்படுத்துவதுடன் சமூக வளைத்தளங்கள் (facebook, whatsapp, twitter,you tube) ஊடாகவும் சிறந்தமுறையில் இந்த அறிவை வழங்கலாம். மக்கள் மத்தியில் கலந்துரையாடல் பிரச்சாரங்கள் மூலம் தனியார் சட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

**முடிவுரை**

முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த தெளிவின்மையானது முஸ்லிம்களுக்கு மத்தியில் அதன் தேவையை உணர்த்துகின்றது. எனவே பல்லினமக்கள் வாழும் இலங்கை நாட்டில் முஸ்லிம் தனியார் சட்டம் குறித்த அறிவினை முஸ்லிம்களுக்கு வழங்குவது அவசியமான தொன்றாகும். ஆகவே வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் நாளைய சமுதாயத்தை வழிக்காட்டுவது மார்க்க அறிஞர்களினதும் புத்தி ஜீவிகளினதும் கடமையாகும்.

**உசாத்துணைகள்**

1. சூளனி கொடிக்கார. (2009). இலங்கையின் முஸ்லிம் குடும்பச்சட்டம் கொள்கை நடைமுறை மற்றும் பெண்கள் தொடர்பான அக்கரைக்குரிய விடயங்கள். கொழும்பு முஸ்லிம் பெண்கள் ஆராய்சி செயல் முன்னணி.

2. ஹஸனாஹ் சேகு இஸ்ஸதீன், (2015). இஸ்லாமிய நோக்கில் பால்நிலை சமத்துவம் மற்றும் சமூக நீதி. இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம்.
3. ஷம்ஸ் பீர்ஜாதா, (1998). முஸ்லிம் தனியார் சட்டம், இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை.
4. வீரமன்த்ரி, சி.ஜி., (2009). இஸ்லாமியச் சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை, மாற்றுப் பிரதிகள், சென்னை.
5. நவாஸ் சனூர்தீன், எம்., (2017). முஸ்லிம் தனியார் சட்டங்கள் பற்றிய அக, புறவயப் பார்வைகள், ஜாமிஆ நளீமிய்யா வெளயீட்டகம், பேருவளை.
6. மன்சூர், எம்.ஏ.எம்., (2017). முஸ்லிம் தனியார் சட்டம் சில அவதானங்கள், ஜாமிஆ நளீமிய்யா வெளயீட்டகம், பேருவளை.
7. றியாந்தினி, கே., (2017). இலங்கையின் திருமணம் தொடர்பான சட்டங்களில் முஸ்லிம் சட்டத்தின் வகிபங்கு, நான்காவது சர்வதேச ஆய்வரங்கு, இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
8. November 4th, 2016. முஸ்லிம் தனியார் சட்டத்தில் விட்டுக்கொடுப்பு இல்லை ஆனால் மாற்றங்கள் தேவை. available: srilanka muslims.lk , access:25.09.2017.
9. Thulamparam, march 6th ,2014, முகநூல் பாவனையும் எமது சமூகமும். available:http://m.facebook.com, access:25.09.2017.